1987 நவம்பர் 11]

(முற்பகல் 10-30)

திரு. ஜெ. ராஜாபாபு: தலைவரவர்களே, போளூரிலுள்ள பேருந்து நிலையத்திற்கு நாள் ஒன்றுக்கு 200 பஸ்கள் வருகின்றன. அங்கே இடவசதி இல்லாத காரணத்தால் வழியிலும் மரத்தடியிலும் பஸ்கள் நிற்கின்றன. அதனால் பிரயாணிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மேலும், போளூர் பகுதி வளர்ந்து வருகிற ஒரு பகுதியாக இருக்கிறது. ஆகையால் அந்தப் பகுதியிலுள்ள மக்களின் குறைகளைப் போக்க ஒரு புதிய பஸ் நிலையத்தை அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நகராட்சிகளுக்கும் பேரூராட்சிகளுக்கும் இதைப் போன்ற திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்தப் பேரூராட்சியைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே கடைகள் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்து, கட்டி முடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ஆனால் கட்டி முடிக்கப்பட்டுள்ள கடைகளுக்கு எல்லாம் வருவாய் வருவதற்கு உரிய வகைகளில் முறையாக ஏலம் விடப்பட்டோ அல்லது மற்ற வகையிலோ செய்ய வேண்டிய பணிகள் நிறைவேற்றப்படவில்லை என்ற தகவல் இருக்கிறது. பேருந்து நிலையம் மிகவும் முக்கியமான தேவை என்று தெரிகிறது. ஏற்கெனவே கொடுக்கப்பட்ட நிதியில் கட்டப்பட்டுள்ள கடைகளை அந்த நிர்வாகம் சரியாக மக்களுக்குப் பயன்படுத்துகின்ற முயற்சியில் ஈடுபட்டு, அதற்குப் பின்னால் புதிதாக இந்தப் பேருந்து நிலையம் கட்டும் முயற்சியில் ஈடுபடுகிறபோது, இருக்கின்ற நிதிநிலைமையை ஒட்டி இதை அரசு பரிசீலிக்கும்.

கூடலூர் பேரூராட்சியை நகராட்சியாக்கும் திட்டம்.

38—(*வினா எண். 13804) திரு. சி. சுப்புராயர்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் கூடலூர் பேரூராட்சியை நகரசபை ஆக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் கூடலூர் பேரூராட்சியை நகராட்சியாக அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சி. சுப்புராயர் : தலைவரவர்களே, மதுரை மாவட்டம் கூடலூர் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கூடலூரில் லோயர் கேம்ப் என்ற ஒரு கிராமம்—13-வது வார்டில் அடங்கியுள்ளது. அங்கே 2000-க்கு மேற்பட்ட கிராமப்புற மக்கள் வசிக்கிறார்கள். அந்தக் கிராமம் பேரூராட்சியில் அடங்கியிருப்பதால் கிராமப்புறங்களுக்கு வழங்கக்கூடிய அரசு சலுகைகள் எதுவும் கிடைக்கவில்லை. ஆகவே, லோயர் கேம்ப் கிராமத்தை கூடலூர் பேரூராட்சியி லிருந்து பிரித்து தனியாக அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூடலூர் பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற வேண்டுமென்று விரும்பினால், அதற் குள்ளே அடங்கியிருக்கிற பகுதியைப் பிரிக்கச் சொல்லக் கூடாது. அப்படி பிரித்தால் அது பேரூராட்சியாகத்தான் இருக்கும். சில நேரங்களில் பேரூராட்சி சாதாரண ஊராட்சியாக மாறிவிடவும் கூடும். ஆகவே, உறுப்பினர் அவர்கள் அதை நகராட்சியாக ஆக்கவேண்டுமென்று விரும்புகிறாரா அல்லது அவர்கள் குறிப் பிட்ட பகுதியை பேரூராட்சியிலிருந்து பிரிக்க வேண்டுமென்று விரும்புகிறாரா என்று முடிவு செய்து, தனியாகக் கேள்வி போட்டால் அதற்கு உரிய பதில் அளிக்கப்படும்.

கமுதி மகப்பேறு மருத்துவமனைக்குப் பெண் மருத்துவர்.

39—(*வினா எண் 3757) திரு. கே. முத்துவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் கமுதி மகப்பேறு மருத் துவமனைக்குப் பெண் மருத்துவ அதிகாரி நியமிக்கப்பட வில்லையா?